138

தமிழ்ச்

# சிற்றிலக்கண வினா விடை

138

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1948
MADRAS

ஜி. பால் & கம்பெனி

TB
P31(6)
N47
88753

## தமிழ்

# சிற்றிலக்கண வினா விடை

சென்னை, பச்சையப்பன் கல்லூரி மாஜித் தமிழாசிரியர்

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

இயற்றியது

பிரசுர கர்த்தர்

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி**

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு

ஜார்ஜ் டவுன், சென்னை

பதிப்புரிமை] 1947 [விலை அணா 6

Printed at the Liberty Press, Madras—Q. H. M. S.499
for B. G. Paul & Co. Q. H. Ms. 2— 2000 Copies

## முகவுரை

மாணவர்கள் விஷயங்களை உணர்வதற்குப் பாஷை இன்றியமையாதது. ஆகையால், மாணவர்களுக்கும் இளமையிலிருந்தே பாஷையைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் இளமையில் பாஷையைப் பிழையாகப் பேசியும், எழுதியும் பழகிவிடுவார்களாயின், பிறகு அப்பிழைகளைப் போக்குதல் அருமையாகும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' அன்றோ? ஆகையால், மாணவர்களுக்குக் கீழ் வகுப்புகளிலிருந்தே அவ்வவ்வகுப்புகளுக்கேற்றபடி முறையாக இலக்கணங் கற்பித்து வரவேண்டும்.

கல்வி இலாக்கா அதிகாரிகள் அண்மையிலனுப்பியுள்ள சுற்றறிக்கையிற் காணும் முறையை (Inductive Method) அனுசரித்தே இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

கா. ர. கோ.

5

# பொருள் அட்டவணை


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| I | எழுத்தியல் : | | |
| | i. உயிர் எழுத்து | .... | 1 |
| | ii. மெய் எழுத்து | .... | 3 |
| | iii. உயிர்மெய் எழுத்து | .... | 5 |
| | vi. ஆய்த எழுத்து | .... | 7 |
| | v. சம்ஸ்கிருத எழுத்து | .... | 11 |
| II | சொல்லியல் : | | |
| | i. பெயர்ச் சொல் | .... | 13 |
| | ii. வினைச்சொல் | ... | 31 |
| | iii. இடைச் சொல் | .... | 46 |
| | iv. உரிச் சொல் | .... | 49 |
| III | புணரியல் : | | |
| | i. உயிர் ஈற்றுப் புணர்ச்சி | .... | 52 |
| | ii. மெய்யீற்றுப் புணர்ச்சி | .... | 55 |
| IV | சொற்றொடர் இயல் | .... | 57 |

# தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை

## 1. எழுத்தியல்

1. தமிழ்ப் பாஷையிலுள்ள எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

தமிழ்ப் பாஷையில் உள்ள எழுத்துகள் நான்கு வகைப்படும்.

2. அவை எவை?

அவை : i. உயிர் எழுத்து,
ii. மெய் எழுத்து,
iii. உயிர்மெய் எழுத்து,
iv. ஆய்த எழுத்து

என்பன.

### i. உயிர் எழுத்து

3. உயிர் எழுத்துகள் எத்தனை? அவை எவை?

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

(குறிப்பு :—வேறு எழுத்துகளின் உதவி இல்லாமல் தாமே ஒலிக்கும் எழுத்துகள் உயிர் எழுத்துகளாம்.)

4. உயிர் எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

உயிர் எழுத்துகள் இரண்டு வகைப்படும்.

அவை : 1. குற்றெழுத்து,
2. நெட்டெழுத்து என்பன.

5. அவற்றுள் குற்றெழுத்துகள் எத்தனை? அவை எவை?

குற்றெழுத்துகள் ஐந்து. அவை அ, இ, உ, எ, ஒ என்பன.

(குறிப்பு :—இந்த எழுத்துகள் குறுகிய ஓசையை உடையன. ஆகையால், குற்றெழுத்து என்று சொல்லப்படுகின்றன. இவற்றுக்குக் குறில் என்னும் மற்றொரு பெயரும் உண்டு.)

6. நெட்டெழுத்துகள் எத்தனை? அவை எவை?

நெட்டெழுத்துகள் ஏழு. அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

(குறிப்பு :—இந்த எழுத்துகள் நீண்ட ஓசையை உடையவை. ஆகையால், நெட்டெழுத்து என்று சொல்லப்படுகின்றன. இவற்றிற்கு நெடில் என்னும் மற்றொரு பெயரும் உண்டு.)

## பயிற்சி—1

1. உயிரையும் ஆய்தத்தையும் நீக்கினால், மீதியாகும் தமிழ்ப் பாஷையின் எழுத்துகள் எத்தனை?
2. அவை யாவை?
3. (அ) இது எங்கள் பசு.
   (ஆ) அது உங்கள் வண்டி.
   (இ) தெருவில் ஒரு குதிரை ஓடுகிறது.
   (ஈ) முத்தன் தகப்பனார் நேற்று ஐந்து ஆடுகளை வாங்கினார்.

இவைகளில் வந்துள்ள உயிர்க் குற்றெழுத்துகளையும், உயிர் நெட்டெழுத்துகளையும் வேறு வேறாக எடுத்தெழுது.

4. மேல்வாக்கியங்களில் வாராத உயிர் எழுத்துகள் எவை?

5. அவை குற்றெழுத்துகளா, நெட்டெழுத்துகளா?

## ii. மெய் எழுத்து

7. மெய் எழுத்துகள் எத்தனை? அவை எவை?

மெய் எழுத்துகள் பதினெட்டு. அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

(குறிப்பு:—மெய் எழுத்துகள் தனித்திருக்கும்போது அவற்றிற்கு உச்சரிப்பு இல்லை; அவை உயிர் எழுத்தோடு கூடிய பொழுதுதான் அவற்றிற்கு உச்சரிப்பு உண்டு. ஆகையால், அவை உச்சரிக்கப்படும்போது இக், இங், இச், இஞ் என இகர உயிர் எழுத்தோடு கூட்டியே உச்-சரிக்கப்படும். மெய் எழுத்துகளுக்கு மேலே புள்ளி எழுதப்படும்.)

8. மெய் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

மெய் எழுத்து மூன்று வகைப்படும்.

அவை: 1. வல்லெழுத்து,
2. மெல்லெழுத்து,
3. இடையெழுத்து என்பன.

9. இவற்றுள் வல்லெழுத்துகள் எவை?

க், ச், ட், த், ப், ற் என்னும் இந்த ஆறும் வல்லெழுத்துகளாம்.

(குறிப்பு :—இவை மற்ற மெய் எழுத்துகளைவிட வன்மையான ஓசையை உடையவை ; ஆகவே, வல்லெழுத்துகள் என்று சொல்லப்படுகின்றன. இவற்றை வல்லினம், வன்கணம், வன்மை, வலி என்று சொல்வதும் உண்டு.)

10. மேல்லேழுத்துகள் எவை?

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் இந்த ஆறும் மெல்லெழுத்துகளாம்.

(குறிப்பு :—இவை மற்ற மெய் எழுத்துகளைவிட மென்மையான ஓசையை உடையவை; ஆகவே, மெல்லெழுத்து என்று சொல்லப்படுகின்றன. இவற்றை மேல்லினம், மேன்கணம், மேன்மை, மேலி என்று சொல்வதும் உண்டு.)

11. இடை எழுத்துகள் எவை?

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் இந்த ஆறும் இடை எழுத்துகளாம்.

(குறிப்பு :—இவை வல்லெழுத்துக்கும் மெல்லெழுத்துக்கும் இடைத்தரமான ஓசையை உடையவை. ஆகையால், இவை இடை எழுத்துகள் என்று சொல்லப்படுகின்றன. இவற்றை இடையினம், இடைக்கணம், இடைமை, இடை என்று சொல்வதும் உண்டு.)

## பயிற்சி—2

1. மேய் எழுத்துகளில் வல்லேழுத்துகளை நீக்கினால், மீதி உள்ள எழுத்துகள் எத்தனை?
2. மேய் எழுத்துகளின் வரிசையில் இரண்டாவது எழுத்து எந்த இனத்தைச் சேர்ந்தது? அந்த இனத்தைச் சேர்ந்த மற்ற மேய் எழுத்துகள் எவை?

3. மார்பு, வில், ஙேய், வாள் என்னுஞ் சொற்களில் வந்துள்ள மெய்யெழுத்துகள் எந்த இனத்தைச் சேர்ந்தவை? அந்த இனத்தைச் சேர்ந்த மற்ற மெய் எழுத்துகள் எவை?

4. பத்து, வட்டி, குத்து, பந்து, வண்டி, குந்து இவற்றுள் முதல்மூன்றுசொற்களில்உள்ள மெய்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவை? மற்ற மூன்று சொற்களில் உள்ள மெய்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவை?

## iii. உயிர்மெய் எழுத்து

12. உயிர்மெய் எழுத்துகள் என்று எவற்றிற்குப் பெயர் உண்டு?

உயிரும் மெய்யும் கூடி வழங்கும் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் என்று பெயர் பெறும்.

13. அவை எவை? எத்தனை?

அவை கம்முதல் னௌ வரையில் உள்ள இருநூற்றுப் பதினாறு எழுத்துகளாம்.

14. உயிர்மெய் எழுத்துகள் எப்படி இருநூற்றுப் பதினாறு ஆகின்றன?

பதினெட்டு மெய்களில் ஒவ்வொரு மெய்யோடும் பன்னிரண்டு உயிரும் தனித்தனியே கூடும். ஒரு மெய்யோடு பன்னிரண்டு உயிர் கூடுவதனால், பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன. இவ்வாறே பதினெட்டு மெய்யோடும் பன்னிரண்டு உயிரும் கூடுவத-

ஞல், (18×12=216) இருநூற்றுப் பதினறு உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

(குறிப்பு :—*உயிர்மெய் எழுத்தைப் பிரிக்கும்போது மெய் எழுத்தை முன்னும் உயிர் எழுத்தைப் பின்னுமாகப் பிரிக்கவேண்டும். உயிர்மெய் எழுத்திலும் உயிர் எழுத்தை நோக்கிக் குற்றெழுத்து, நெட்டெழுத்து என்னும் பிரிவும்; மெய் எழுத்தை நோக்கி வல்லினம், மெல்லினம், இடை இனம் என்னும் பிரிவும் உண்டு. பதினெட்டு மெய்களோடு ஐந்து உயிர்க் குற்றெழுத்துகள் தனித்தனி சேருவதனுல், (18×5=90) தொண்ணூறு உயிர்மெய்க் குற்றெழுத்துகளும்; பதினெட்டு மெய்களோடு ஏழு உயிர் நெட்டெழுத்துகள் தனித்தனி சேருவதனுல் (18×7=126) நூற்றிருபத்தாறு உயிர்மெய் நெட்டெழுத்துகளும் உண்டாகின்றன. ஆறு வல்லின மெய்களோடு பன்னிரண்டு உயிர்களும் தனித்தனி சேருவதனுல், (6×12=72) எழுபத்திரண்டு உயிர்மெய் வல்லெழுத்துகளும்; ஆறு மெல்லின மெய்களோடு பன்னிரண்டு உயிர்களும் தனித்தனி சேருவதனுல், (6×12=72) எழுபத்திரண்டு உயிர்மெய் மெல்லெழுத்துகளும்; ஆறு இடையின மெய்களோடு பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் தனித்தனி சேருவதனுல், (6×12=72) எழுபத்திரண்டு உயிர்மெய் இடையெழுத்துகளும் உண்டாகின்றன.)

## பயிற்சி—3

1. வல்லின மேய் எழுத்துகளோடு பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் தனித்தனி கூடுவதால், எத்தனை உயிர்மெய் எழுத்துகள் உண்டாகும்?

---

*உபாத்தியாயர் உயிர்மெய் எழுத்துகளைக் கறுப்புப் பலகையில் எழுதி, அவற்றைப் பிரிக்கும் விதத்தைப் பிள்ளைகளுக்கு நன்ருக விளக்குதல் வேண்டும்.

2. மெல்லின மெய்களோடு ஏழு உயிர் நெட்டெழுத்துகளும் கூடினல், எத்தனை உயிர்மெய் நெட்டெழுத்துகள் உண்டாகும் ?

3. வை என்பதில் உள்ள மெய் எழுத்தையும் உயிர் எழுத்தையும் பிரித்து, அவைகளில் மெய் எழுத்து இன்ன இனத்தைச் சேர்ந்தது; உயிர் எழுத்து இன்ன வகையைச் சேர்ந்தது என்று சொல்லு.

4. ய், ர், ல் என்னும் மெய் எழுத்தோடு ஐ என்னும் உயிர் எழுத்தையும் ; வ், ழ், ள் என்னும் மெய் எழுத்தோடு ஆ என்னும் உயிர் எழுத்தையும் சேர்த்தால், எந்த எந்த உயிர்மெய் எழுத்துகள் உண்டாகும் ?

## iv. ஆய்த எழுத்து

15. ஆய்த எழுத்து என்பது யாது ?

**உயிரும் ஆகாமல், மெய்யும் ஆகாமல், தனியே நின்று, சொல்லுக்கு நடுவில் மூன்று புள்ளி வடிவாய் வரும் ஓர் எழுத்தே ஆய்த எழுத்தாகும்.**

**(உ-ம்.) அஃது, இஃது, எஃது.**

(குறிப்பு:—அஃது என்பதில், ஆய்த எழுத்து, அகரத்திற்கும் துகரத்திற்கும் இடையில் வந்திருக்கிறது. இப்படியே இஃது, எஃது என்னும் சொற்களிலும் வந்திருப்பது காண்க. ஆய்த எழுத்து எப்பொழுதும் உயிர்க் குற்றெழுத்து அல்லது உயிர்மெய்க் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்துக்கு முன்னுமாகவே வரும். உயிரும் ஆகாமல், மெய்யும் ஆகாமல் தனியே நிற்பதால்,

ஆய்தத்திற்குத் தனி நிலை என்றும் ஒரு பெயர் உண்டு. அடுப்பின் மூன்று கொம்மைகளைப் போல இருப்பதால், இதற்கு ஆய்தம் என்னும் பெயர் உண்டாயிற்று.)

16. தமிழ்ப் பாஷையில் உள்ள எழுத்துகளின் வகை, அவ்வகையின் உட்பிரிவு, ஒவ்வொரு வகையிலும் உள்ள எழுத்துகளின் எண் ஆகிய இவைகளை அட்டவணைப்படுத்திக் காட்டு.

| வகை | வகையில் பிரிவு | பிரிவில் எழுத்துகளின் எண் | | தொகை |
|---|---|---|---|---|
| 1. உயிர்எழுத்து (12) | 1. குற்றெழுத்து | | 5 | 12 |
| | 2. நெட்டெழுத்து | | 7 | |
| 2. மெய் எழுத்து (18) | 1. வல்லின எழுத்து | | 6 | 18 |
| | 2. மெல்லின எழுத்து | | 6 | |
| | 3. இடையின எழுத்து | | 6 | |
| 3. உயிர் மெய் எழுத்து (216) | 1. குற்றெழுத்து | 18× 5 | 90 | 216 |
| | 2. நெட்டெழுத்து | 18× 7 | 126 | |
| | 3. வல்லின எழுத்து | 6×12 | 72 | ,, |
| | 4. மெல்லின எழுத்து | 6×12 | 72 | |
| | 5. இடையின எழுத்து | 6×12 | 72 | |
| 4. ஆய்த எழுத்து (1) | | | 1 | 1 |
| ஆகமொத்தம் தமிழ்ப் பாஷையின் எழுத்துகள் | | | | 247 |

17. தமிழ் எழுத்துகளில் முன் குறிப்பிடாத வேறு உட்பிரிவுகள் உண்டா? அவை எவை?

தமிழ் எழுத்துகளில் வேறு இரண்டு உட்பிரிவுகளும் உண்டு. அவை: சுட்டு எழுத்து, வினா எழுத்து என்பன.

## 1. சுட்டு எழுத்து

18. சுட்டு எழுத்துகள் எத்தனை? அவை எவை?

சுட்டு எழுத்துகள் மூன்று. அவை அ, இ, உ என்பன.

(உ-ம்.) அவன், அப்புத்தகம்
இவள், இம்மரம்
உது, உப்பலகை

(குறிப்பு:—அ, இ, உ இம்மூன்றில் ஏதேனும் ஒன்று சொல்லுக்கு முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டி (அதாவது குறித்து)க் காட்டும்போது மாத்திரமே சுட்டு எழுத்து என்று சொல்லப்படும். அணில், இரும்பு, உடம்பு என்னும் சொற்களில் உள்ள அ, இ, உ என்னும் எழுத்துகள் ஒரு பொருளைச் சுட்டிக்காட்டவில்லை. ஆகையால், இவை சுட்டு எழுத்துகள் அல்ல; உயிர்க் குற்றெழுத்துகளே. சுட்டு எழுத்துகளில் அ தூரத்தில் உள்ள பொருளையும்; இ சமீபத்தில் உள்ள பொருளையும்; உ நடுவிலாயினும், பின்பக்கத்திலாயினும், மேலாயினும் உள்ள பொருளையும் குறித்துக் காட்டும். உ என்னும் சுட்டு எழுத்துப் பாட்டில் மாத்திரம் வரும்; மற்ற அ, இ என்பன பாட்டிலும் வசனத்திலும் வரும்.)

## 2. வினா எழுத்து

19. வினா எழுத்துகள் எத்தனை? அவை எவை?

வினா எழுத்துகள் ஐந்து. அவை ஆ, எ, ஏ, ஓ, யா என்பன.

(உ-ம்.) மனிதனா? மரமா? (ஆ)
எவன்? எது? (எ)
ஏவர்? ஏது? (ஏ)
பெண்ணோ? பேயோ? (ஓ)
யாவள்? யாது? (யா)

(குறிப்பு:—ஆ, எ, ஏ, ஓ, யா என்பன வினாவை (அதாவது கேள்வி கேட்கும் பொருளை)த் தெரிவிக்கும் போது மாத்திரமே வினா எழுத்து எனப்படும்.)

20. வினா எழுத்துகள் ஐந்தில் எந்த எழுத்துகள் சொல்லுக்கு முதலில் மாத்திரம் வரும்? எந்த எழுத்துகள் சொல்லுக்கு முடிவில் மாத்திரம் வரும்? எந்த எழுத்துச் சொல்லுக்கு முதலிலும் முடிவிலும் வரும்?

வினா எழுத்துகள் ஐந்தில் எ, யா என்னும் இரண்டும் சொல்லுக்கு முதலில் மாத்திரம் வரும்; ஆ, ஓ என்னும் இரண்டும் சொல்லுக்கு முடிவில் மாத்திரம் வரும்; ஏ என்பது சொல்லுக்கு முதலிலும் முடிவிலும் வரும்.

(உ-ம்.) எவன்? எந்நாடு? யாது? யாங்ஙனம்? } எ, யா சொல்லுக்கு முதலில் வந்தன.

அவனா? இராமனா? அவனோ? கிளியோ? } ஆ, ஓ சொல்லுக்கு முடிவில் வந்தன.

ஏவன்? ஏது? அவனே? அன்றே? } ஏ சொல்லுக்கு முதலிலும் முடிவிலும் வந்தது

(குறிப்பு:—சொல்லுக்கு நடுவில் எந்த வினா எழுத்தும் வாராது. 'அவனே? அன்றே?' என்னும் சொற்களுக்கு

'அவனோ? அன்றோ?' என்பன பொருள். வினா எழுத்து ஐந்தில் யா ஒன்று மாத்திரம் உயிர்மெய் எழுத்து.)

## பயிற்சி—4

சுட்டெழுத்துகளையும் வினா எழுத்துகளையும் அட்டவணையில் ஏற்ற இடங்களில் அமைத்துக் காட்டு.

| உயிர் | | | | உயிர்மெய் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சுட்டு | | வினா | | சுட்டு | | வினா. | |
| குறில் | நெடில் | குறில் | நெடில் | குறில் | நெடில் | குறில் | நெடில் |
| | | | | | | | |

## தமிழில் வந்து வழங்கும் சம்ஸ்கிருத எழுத்துகள்

**21.** தமிழ் எழுத்துகளே அன்றிச் சில சம்ஸ்கிருத எழுத்துகளும் தமிழில் வந்து வழங்குகின்றன அல்லவா? அவை எத்தனை? அவை எவை?

**தமிழில் வந்து வழங்கும் சம்ஸ்கிருத எழுத்துகள் ஐந்து. அவை ஜ், ஸ், ஷ், ஹ், க்ஷ என்பன.**

| | மெய் | உயிர்மெய் |
|---|---|---|
| (உ-ம்.) | வஜ்ரம் | புஜம் |
| | வஸ்த்ரம் | ஸர்ப்பம் |

| மெய் | உயிர்மெய் |
|---|---|
| இஷ்டம் | பாஷை |
| சஹ்யம் | ஹரி |
| ஸூக்ஷ்மம் | அக்ஷம் |

(குறிப்பு:—ஜ், ஸ், ஷ், ஹ், க்ஷ் இவ்வைந்தும் மெய்கள். இவை தனி மெய்யாகவும், உயிருடன் கூடி உயிர்மெய்யாகவும் தமிழில் வந்து வழங்கும். இவை வசனத்தில் மாத்திரம் தம் சுய உருவத்திலும், திரிந்தும் வரும்; பாட்டில் வரும் போது தமிழ் எழுத்தாகத் திரித்தே எழுதப்படும். உதாரணமாக, வஜ்ரம் என்பது பாட்டில் வச்சிரம் என்று எழுதப்படும். மற்றவையும் இப்படியே.)

## பயிற்சி—5

கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள சம்ஸ்கிருத எழுத்துகளில் மெய் வேறாகவும், உயிர்மெய் வேறாகவும் எடுத்தெழுது:

1. ஸாஸ்த்ரங்களைக் கற்பது நல்லது.
2. மழை ஜலம் ஸுத்தமானது.
3. ஹரியை வணங்குபவர் வைஷ்ணவர்.
4. வேஷ்டியை ஸுத்தமாகவும் ஜாக்ரதையாகவும் வைத்துக்கொள்.
5. பக்ஷிகளிற்சில இனிமையாகப் பாடும்.
6. இந்தியாவில் க்ஷேத்திரங்கள் பல உண்டு.
7. நல்லவரைக் கடவுள் ரக்ஷிப்பார்.
8. இலக்கணம் பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும்.

## II. சொல்லியல்

### தமிழ்ச் சொற்களின் வகை

22. தமிழ்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

தமிழ்ச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை : 1. பெயர்ச் சொல், 2. வினைச் சொல், 3. இடைச் சொல், 4. உரிச் சொல் என்பன.

### i. பெயர்ச் சொல்

23. பெயர்ச் சொல்லாவது யாது?

ஏதாவது ஒன்றைக் குறிக்கும் பெயராக வழங்கும் சொல் பெயர்ச் சொல்லாம்.

24. பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை: 1. பொருட்பெயர், 2. இடப் பெயர், 3. காலப் பெயர், 4. சினைப் பெயர், 5. குணப் பெயர், 6. தொழிற்பெயர் என்பன.

(உ-ம்.) மனிதன், பசு, மரம்—பொருட்பெயர்
வானம், பூமி, ஊர், நாடு—இடப் பெயர்
ஆண்டு, மாதம், வாரம்—காலப் பெயர்
கண், கை, கால், கிளை—சினைப் பெயர்
கருமை, வெண்மை—குணப் பெயர்
நடத்தல், செலவு—தொழிற்பெயர்

25. பெயர்ச் சொல்லில் எவற்றை அறிய வேண்டும்?

பெயர்ச் சொல்லில் **1.** திணை, **2.** பால், 3. எண், **4.** இடம், **5.** வேற்றுமை என்னும் ஐந்தையும் அறிய வேண்டும்.

1. திணை

26. திணை என்பதற்குப் பொருள் என்ன?

திணை என்பதற்குக் குலம் என்பது பொருள்.

27. திணை எத்தனை? அவை எவை?

திணை இரண்டு. அவை: 1. உயர் திணை, 2. அஃறிணை என்பன.

(குறிப்பு:—உயர் திணை - உயர்வாகிய குலம்; அஃறிணை [அல் + திணை] - உயர்வு அல்லாததாகிய [தாழ்வாகிய] குலம்.)

28. உயர்திணைப் பெயர்கள் எவை?

மக்கள் பெயரும், தேவர்கள் பெயரும் உயர் திணைப் பெயர்களாம்.

| | மக்கள் பெயர் | தேவர்கள் பெயர் |
|---|---|---|
| (உ-ம்.) | பொன்னன் | இந்திரன் |
| | கண்ணகி | சந்திரன் |
| | ஔவை | வருணன் |

29. அஃறிணைப் பெயர்கள் எவை?

மக்கள் பெயரும் தேவர்கள் பெயரும் அல்லாத மற்ற எல்லாப் பொருள்களின் பெயரும் அஃறிணைப் பெயர்களாம்.

(உ-ம்.) சிங்கம், கிளி, மரம், மலை, பொன், வெள்ளி.

## 2. பால்

30. பால் என்பதற்குப் பொருள் என்ன ?

பால் என்பதற்குப் பகுப்பு என்பது பொருள்.

(குறிப்பு :—பால் என்பது திணையின் உட்பகுப்பு.)

31. பால் எத்தனை? அவை எவை?

பால் ஐந்து. அவை : 1. ஆண் பால், 2. பெண் பால், 3. பலர் பால், 4. ஒன்றன் பால், 5. பலவின் பால் என்பன.

32. ஐந்து பால்களுள் உயர் திணைக்கு உரிய பால்கள் எவை?

ஐந்து பால்களுள் ஆண் பால், பெண் பால், பலர் பால் என்னும் மூன்றும் உயர் திணைக்கு உரிய பால்களாம்.

(உ-ம்.) இராமன், அரசன்—ஆண் பால்
கண்ணகி, அரசி—பெண் பால்
அரசர், அரசிகள்—பலர் பால்

(குறிப்பு :—உயர் திணையில் ஓர் ஆண் ஆயின், ஆண் பால் எனவும் ; ஒரு பெண் ஆயின், பெண் பால் எனவும் ; ஆண் எனினும், பெண் எனினும், அவ்விருவரும் கலந்தெனினும் ஒருவரின் மிக்கவர் ஆயின், பலர் எனவும் கொள்க.)

33. அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டும் அஃறிணைக்கு உரிய பால்களாம்.

(உ-ம்.) பசு, மரம், வீடு—ஒன்றன் பால்
பசுக்கள், மரங்கள்—பலவின் பால்

(குறிப்பு :—அஃறிணையில் ஒன்றானால், ஒன்றன் பால் எனவும்; ஒன்றுக்கு மேற்பட்டால், பலவின் பால் எனவும் கொள்க. அஃறிணையில் உயிர் இல்லாதவைகளுக்கு ஆண், பெண் என்னும் பகுப்பு இல்லை; உயிர் உள்ளவைகளுக்கு ஆண், பெண் என்னும் பகுப்பு உண்டாயினும், அப்பகுப்புகள் சிலவற்றில் விளக்கமாகத் தெரிவதில்லை. ஆகையால், அஃறிணையில் ஆண், பெண் என்னும் பகுப்புகள் கூறப்படவில்லை.)

## பயிற்சி—6

1. உயர் திணைக்கும் அஃறிணைக்கும் தனித்தனி மும்மூன்று உதாரணங்கள் எழுது.

2. அரசன், குறத்தி, பாட்டன், கிழவி, தம்பி, மகன்— இவற்றில் ஆண் பாலுக்குப் பெண் பாலும், பெண் பாலுக்கு ஆண் பாலும் எழுது.

3. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை அட்டவணையில் எடுத்தெழுதி, அவற்றிற்கு உரிய திணை பால்களையும் அட்டவணையில் அமைத்துக் காட்டு:

(அ) கண்ணன் குசேலனோடு சாந்தீப முனிவனிடம் படித்தான்.

(ஆ) நளன் சூது ஆடி அரசை இழந்து தமயந்தியோடு காட்டுக்குச் சென்றான்.

(இ) ஔவை அறிவிலும் கல்வியிலும் சிறந்தவள்.

| பெயர்ச் சொல் | திணை | பால் |
|---|---|---|
| | | |

## 3. எண்

34. எண் என்பது யாது?

பொருள்களின் எண்ணிக்கையைத் தெரிவிப்பது எண் எனப்படும்.

35. எண் எத்தனை? அவை எவை?

எண் இரண்டு. அவை: ஒருமை, பன்மை என்பன.

36. ஒருமை எண் என்பது யாது?

ஒரு பொருளைத் தெரிவிப்பது ஒருமை எண்ணும்.

(உ-ம்.) இராமன், சிங்கம், மரம், அது.

37. பன்மை எண் என்பது யாது?

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தெரிவிப்பது பன்மை எண்ணும்.

(உ-ம்.) பிள்ளைகள், கிளிகள், மரங்கள்.

38. ஐந்து பால்களுள் ஒருமை எண்ணுக்கு உரிய பால்கள் எவை?

ஆண் பால், பெண் பால், ஒன்றன் பால் என்னும் மூன்றும் ஒருமை எண்ணுக்கு உரிய பால்களாம்,

(உ-ம்.) மகன், மகள், அது.

39. பன்மை எண்ணுக்கு உரிய பால்கள் எவை?

பலர் பால், பலவின் பால் என்னும் இரண்டும் பன்மை எண்ணுக்கு உரிய பால்களாம்.

## பயிற்சி—7

ஒருமை எண்ணுக்கு உரிய பால்களையும், பன்மை எண்ணுக்குரிய பால்களையும் அட்டவணையில் அமைத்துக் காட்டு :—

| ஒருமை எண் | பன்மை எண் |
|---|---|
| | |

## 4. இடம்

40. இடமாவது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை எவை?

இடமாவது சொற்கள் நிலை பெற்று வழங்கும் வெவ்வேறு ஸ்தானம். அது மூன்று வகைப்படும். அவை: 1. தன்மை இடம், 2. முன்னிலை இடம், 3. படர்க்கை இடம் என்பன.

41 தன்மை இடமாவது யாது? முன்னிலை இடமாவது யாது? படர்க்கை இடமாவது யாது?

**பேசுபவனைக் குறிக்குஞ் சொல் நிற்குமிடம் தன்மையிடம்; கேட்பவனைக் குறிக்குஞ் சொல் நிற்குமிடம் முன்னிலை இடம்; மற்றப் பொருள்களைக் குறிக்கும் எல்லாச் சொற்களும் நிற்குமிடம் படர்க்கை இடம்.**

(குறிப்பு:—பேசுபவன் என ஆண்பால் மேல் வைத்துக்கூறி இருந்தாலும், பேசுபவள், பேசுபவர், பேசுவது, பேசுவன என மற்றப் பால்களிலும் அமைத்துக்கொள்க. கேட்பவன் என்னுமிடத்தும் இப்படியே கொள்க.)

42 திணை, பால், எண் என்பவற்றில் எதை எதை எந்த எந்த இடங்களில் அறியலாம்?

**தன்மை முன்னிலையில் ஒருமை பன்மை என்னும் எண்ணை மாத்திரம் அறியலாம். படர்க்கையில் திணை, பால், எண் என்னும் மூன்றையும் அறியலாம்.**

(குறிப்பு:—இதனால், பெயர்ச் சொற்களில் தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும், முறையே தன்மை ஒருமைப் பெயர், தன்மைப் பன்மைப் பெயர் எனவும்; முன்னிலை ஒருமைப் பெயர், முன்னிலைப் பன்மைப் பெயர் எனவும் இரண்டிரண்டு வகைப்படும் என்றும்; படர்க்கைப் பெயர், படர்க்கை ஆண்பாற்பெயர், படர்க்கைப் பெண்பாற்பெயர், படர்க்கைப் பலர்பாற்பெயர், படர்க்கை ஒன்றன் பாற்பெயர், படர்க்கைப் பலவின்பாற் பெயர் என ஐந்து வகைப்படும் என்றும் அறிந்துகொள்க.)

(உ-ம்.) நான், யான்—ஒருமை
நாம், யாம்
நாங்கள், யாங்கள் } பன்மை } தன்மை

நீ ஒருமை
நீர், நீங்கள் பன்மை } —முன்னிலை

அரசன் உயர்திணை ஆண் பால்
அரசி உயர்திணைப் பெண் பால் } ஒருமை
அது அஃறிணை ஒன்றன் பால்
அவர்கள் உயர்திணைப் பலர் பால்
அவைகள் அஃறிணைப்பலவின் பால் } பன்மை } படர்க்கை

## பயிற்சி—8

1. திணை, பால், எண் என்பனவற்றில் தன்மை முன்னிலை இடங்களில் வாராதவை எவை? மூன்றிடங்களிலும் வருவது எது?

2. கண்ணன், மணி, தம்பி, தங்கை, நீ, பிள்ளைகள், குதிரைகள், நீங்கள், பாட்டி, பாட்டன், நான், நரி, சிங்கம், நாங்கள், யான், யானை, யாம், புல், யாங்கள்—இச்சொற்களுக்குரிய திணை, பால், எண், இடங்களைக் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடு :—

| சொல் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| | | | | |

## 5. வேற்றுமை

43. வேற்றுமையாவது யாது?

பெயர்ச் சொல்லின் பொருளை வேறு-படுத்துவது வேற்றுமையாம்.

44. வேற்றுமை எத்தனை? அவை எவை?

வேற்றுமை எட்டு; அவை: முதல் வேற்-றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்-றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்-றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பன.

45. எட்டு வேற்றுமைகளில் உருபு இல்லாத வேற்றுமை-கள் எவை? உருபு உள்ள வேற்றுமைகள் எவை?

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்று-மையும் எட்டாம் வேற்றுமையும் உருபு இல்-லாத வேற்றுமைகளாம்; இரண்டு முதல் ஏழு வரையிலுள்ள ஆறு வேற்றுமைகளும் உருபு உள்ள வேற்றுமைகளாம்.

46. முதல் வேற்றுமையாவது என்ன?

பெயரின் இயல்பே முதல் வேற்றுமையாம்.

(உ-ம்.) இராமன் (வந்தான்).

(குறிப்பு:—இதில் இராமன் என்னும் பெயர் ஓர் உரு-பையும் கொள்ளாமல் இயல்பாய் நிற்பதைக் காண்க.)

47. இரண்டாம் வேற்றுமையின் உருபு யாது?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம்.

(உம்.) நகையை(ச் செய்தான்).

கண்ணனை(க் கண்டேன்).

48. மூன்ரும் வேற்றுமையின் உருபுகள் எவை?

மூன்ரும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, கொண்டு, உடன் என்பவைகளாம்.

(உ-ம்.) தச்சனுல் (கோவில் கட்டப்பட்டது).

வாளான் (மரத்தை அறுத்தான்).

தம்பியரொடு (தருமர் வந்தார்).

தம்பியரோடு (தருமர் வந்தார்).

(குறிப்பு :—இவ்வுருபுகளில் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன உருபுகள் என்றும்; கொண்டு, உடன் என்பன சொல்லுருபுகள் என்றும் கூறப்படும். கொண்டு என்பது ஆல், ஆன் என்னும் உருபுகளுக்குப் பதிலாகவும், உடன் என்பது ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பதிலாகவும் வரும்.)

(உ-ம்.) வாளால்(வெட்டினுன்.)
வாளான்(வெட்டினுன்.) } வாள்கொண்டு (வெட்டினுன்.)

தம்பியொடு (வந்தான்.)
தம்பியோடு (வந்தான்.) } தம்பியுடன் (வந்தான்.)

49. நான்காம் வேற்றுமையின் உருபு யாது?

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம்.

(உ-ம்.) ஏழைகளுக்கு(ச்சோறு போட்டான்).

50. ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இன், இல், நின்று, இருந்து, விட்டு என்பனவாம்.

(உ-ம்.) காட்டின் (நீங்கினான்).
கல்வியில் (பெரியவர் கம்பர்).
மரத்தினின்று (விழுந்தது பழம்).
திண்ணையிலிருந்து (குதித்தான்).
மரத்தைவிட்டு (இறங்கினான்).

51. ஆறும் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ, உடைய என்பனவாம்.

(உ-ம்.) எனது (பசு)
தனது (படம்)
தன (கைகள்)
பொன்னனுடைய (வீடு)

52. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இடத்தில், கண் என்பனவாம்.

(உ-ம்.) பெட்டியில் (பணம் இருக்கின்றது).
நல்லவரிடத்தில் (நட்புக்கொள்).
குகையின்கண் (சிங்கம் உறங்கும்).

53. எட்டாம் வேற்றுமையின் உருபு யாது?

எட்டாம் வேற்றுமைக்கு மற்ற வேற்றுமை-களுக்குள்ள உருபுகளைப் போன்ற தனியுருபு-

கள் இல்லாவிடினும், பெயர்ச் சொல்லின் ஈறு தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களை அடைதலே அதன் உருபாம்.

(உ-ம்.) மகனே (படி) — மகன் என்னும் பெயரின் ஈற்றில் ஏ என்னும் எழுத்துத் தோன்றியது.

பிள்ளாய் (வா) — பிள்ளை என்னும் பெயரின் ஈற்று ஐ, ஆய் எனத் திரிந்தது.

இராம (எழுது) — இராமன் என்னும் பெயரின் ஈற்றெழுத்துக் கெட்டது.

பயிற்சி—9

1. எந்த எந்த வேற்றுமைகளுக்கு உருபு இல்லை? எந்த எந்த வேற்றுமைகளுக்கு உருபு உண்டு?
2. இராமன் என்னும் பெயரோடு இரண்டாம், நான்காம், ஆறும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுது.
3. கண்ணன் என்னும் பெயரோடு மூன்றும் வேற்றுமை ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுது.

54. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எப்படித் திரியும்?

யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது என் எனத் திரியும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) யான் | முதல் வேற்றுமை | |
| என்னை | 2-ஆம் | ,, |
| என்னால் | 3-ஆம் | ,, |
| எனக்கு | 4-ஆம் | ,, |
| என்னின் | 5-ஆம் | ,, |
| எனது | 6-ஆம் | ,, |

55. யாம், நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எப்படித் திரியும்?

யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் எம் எனவும், நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் நம் எனவும் திரியும்.

(உ-ம்.) யாம்—எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எம்மிடத்தில்.

நாம்—நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நம்மிடத்தில்.

56. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எப்படித் திரியும்?

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது, நின் எனவும், உன் எனவும் திரியும்.

(உ-ம்.) நீ—நின்னை, நின்னால், நினக்கு, நின்னின், நினது, நின்னிடத்தில்.

நீ—உன்னை, உன்னால், உனக்கு
உன்னின், உனது, உன்னிடத்தில்.

57. நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எப்படித் திரியும்?

நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது நம் எனவும், உம் எனவும் திரியும்.

(உ-ம்.) நீர்—நும்மை, நும்மால், நுமக்கு,
நும்மின், நுமது, நும்மிடத்தில்,
நீர்—உம்மை, உம்மால், உமக்கு,
உம்மின், உமது, உம்மிடத்தில்.

58. தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எப்படித் திரியும்?

தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது தன் எனத் திரியும்.

(உ-ம்.) தான்—தன்னை, தன்னால், தனக்கு,
தன்னின், தனது, தன்னிடத்தில்.

59. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எப்படித் திரியும்?

தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது தம் எனத் திரியும்.

(உ-ம்.) தாம்—தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தம்மிடத்தில்.

60. நான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் எந்த வேற்றுமையை ஏற்கும்? எந்த உருபுகளை ஏற்காது?

நான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் முதல் வேற்றுமையை மாத்திரம் ஏற்கும்; இரண்டாம் வேற்றுமை முதலிய வேற்றுமை உருபுகளை ஏற்காது.

(உ-ம்.) நான் (போனேன்).

(குறிப்பு :—யான், யாம், நான், நாம், நீ, நீர், தான், தாம் என்னும் பெயர்கள் எட்டாம் வேற்றுமையை ஏற்கா.)

## பயிற்சி—10

கீழ் உள்ள அட்டவணையில் வேற்றுமை ஏற்கையில் திரியும் பெயர்களை எழுதி, அவை ஏற்கும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து, அவ்வேற்றுமைகளின் எண்கள் உள்ள அறையில் அமைத்துக் காட்டு :—

| பெயர் | 1-ம் வே | 2-ம் வே | 3-ம் வே | 4-ம் வே | 5-ம் வே | 6-ம் வே | 7-ம் வே |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

61. மகர மெய்யை ஈற்றிலுடைய பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எவ்வாறு ஆகும்?

மகர மெய்யை ஈற்றிலுடைய பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அம் என்பது கெட, அத்து என்னும் சாரியை பெறும்.

(உ-ம்.) மரம்—மரத்தை, மரத்தால், மரத்துக்கு, மரத்தின், மரத்தினது, மரத்தில்.

அரம்—அரத்தை, அரத்தால், அரத்துக்கு, அரத்தின், அரத்தினது, அரத்தில்.

62. அகரத்தை ஈற்றில் உடைய பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எவ்வாறாகும்?

அகரத்தை ஈற்றில் உடைய பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது அற்றுச் சாரியை பெறும்.

(உ-ம்.) பல—பலவற்றை, பலவற்றால், பலவற்றுக்கு, பலவற்றின், பலவற்றினது, பலவற்றில்.

சில — சிலவற்றை, சிலவற்றால், சிலவற்றுக்கு, சிலவற்றின், சில வற்றினது, சிலவற்றில்.

63. வகர மெய்யை ஈற்றில் உடைய சுட்டுப் பெயர்களும் வினாப் பெயரும் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது எவ்வாறாகும்?

வகர மெய்யை ஈற்றிலுடைய சுட்டுப்பெயர்-களும் வினுப் பெயரும் வேற்றுமை உருபுகளை எற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

(உ-ம்.) அவ்-அவற்றை, அவற்ருல், அவற்-றுக்கு, அவற்றின், அவற்றினது, அவற்றில்.

இவ்-இவற்றை, இவற்ருல், இவற்-றுக்கு, இவற்றின், இவற்றினது, இவற்றில்.

உவ்-உவற்றை, உவற்ருல், உவற்-றுக்கு, உவற்றின், உவற்றினது, உவற்றில்.

எவ்-எவற்றை, எவற்ருல், எவற்றுக்கு, எவற்றின், எவற்றினது, எவற்றில்.

(குறிப்பு :—அவ், இவ், உவ் என்பன சுட்டுப் பெயர்கள் ; எவ் என்பது வினுப் பெயர்.)

64. அவை, இவை, உவை என்னும் சுட்டுப் பெயர்களும் எவை என்னும் வினுப்பெயரும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாருகும்?

அவை, இவை, உவை என்னும் சுட்டுப் பெயர்களும், எவை என்னும் வினுப் பெயரும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது ஈற்றில் உள்ள ஐகாரம் கெட, அற்றுச் சாரியை பெறும்.

(உ-ம்.) அவை—அவற்றை, அவற்றால், அவற்றுக்கு, அவற்றின், அவற்றினது, அவற்றில்.

(குறிப்பு:—இவை, உவை, எவை என்பனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.)

65. எல்லாம் என்னும் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறாகும்?

எல்லாம் என்னும் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது ஈற்றில் உள்ள மகரம் கெட, அற்றுச் சாரியை பெற்று, அதன்மேல் உருபு ஏற்று, அவ்வுருபின்மேல் உம் என்பதையும் பெறும்.

(உ-ம்.) எல்லாம்+அற்று+ஐ+உம்—
எல்லாவற்றையும்
எல்லாம்+அற்று+ஆல்+உம்—
எல்லாவற்றாலும்
எல்லாம்+அற்று+கு+உம்—
எல்லாவற்றுக்கும்

(குறிப்பு:—பிற உருபுகளையும் இவ்வாறே சேர்த்துக்கொள்க. எல்லாம் என்பது இரு திணை மூவிடங்களுக்கும் பொதுவாய்ப் பன்மையில் வரும் பெயர். பெயருக்கும் உருபுக்கும் இடையில் அவ்விரண்டையும் சேர்க்க வருவன ஆதலால், அத்து, அற்று முதலியன சாரியை எனப்படும்.

## பயிற்சி—11

1 அத்துச் சாரியை எங்கே வரும்? இரண்டு உதாரணம் எழுது.

2. அவ், எவ், அவை, எவை என்னும் பெயர்ச் சொற்களோடு இரண்டாம் வேற்றுமை உருபையும், ஆறும் வேற்றுமை உருபையும் சேர்த்தெழுது.

3. சிலவற்றுக்கு, பலவற்றுல், நிறத்தில், எல்லாவற்றையும் என்பனவற்றில் இன்னது பெயர், இன்னது சாரியை, இன்னது உருபு என அடியில் உள்ள அட்டவணையில் பிரித்து அமைத்துக் காட்டு:—

| பெயர் | சாரியை | உருபு |
|---|---|---|
| | | |

## ii. வினைச் சொல்

66. வினைச் சொல்லாவது யாது?

**பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச் சொல்லாம்.**

(உ-ம்.) (இராமன்) படித்தான்.
(குதிரை) ஓடியது.

(குறிப்பு:—இவற்றுள் படித்தான் என்பது இராமன் என்னும் பொருளின் தொழிலையும், ஓடியது என்பது குதிரை என்னும் பொருளின் தொழிலையும் காட்டுவதால், இவை வினைச் சொற்களாம்.)

67. வினைச் சொல்லில் முக்கியமாக அறிய வேண்டுவன எவை?

வினைச் சொல்லில் முக்கியமாக அறிய வேண்டுவன காலமும், உடன்பாடு, எதிர்மறை என்பவைகளுமாம்.

68. காலம் எத்தனை? அவை எவை?

காலம் மூன்று; அவை இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பன.

69. இறந்த காலமாவது யாது?

முன்னே நடந்துவிட்ட தொழிலைத் தெரிவிப்பது இறந்த காலமாம்.

(உ-ம்.) (இராமன்) படித்தான்.

70. நிகழ் காலமாவது யாது?

இப்பொழுது நடக்கின்ற தொழிலைத் தெரிவிப்பது நிகழ் காலமாம்.

(உ-ம்.) (இராமன்) படிக்கிறான்.

71. எதிர் காலமாவது யாது?

இனி நடக்கும் தொழிலைத் தெரிவிப்பது எதிர் காலமாம்.

(உ-ம்.) (இராமன்) படிப்பான்.

72. வினைச் சொல் காலத்தை எப்படிக் காட்டும்?

வினைச் சொல் பெரும்பாலும் இடை நிலை-களாலும், சிறுபான்மை சில விகுதிகளாலும், இரட்டித்து நிற்கும் சில பகுதிகளாலும் காலத்தைக் காட்டும்.

73. பகுதி என்பது யாது?

ஒரு சொல்லைப் பிரித்தால், முதலில் நிற்கும் உறுப்புப் பகுதியாம்.

(உ-ம்.) உண்டான்—உண்+ட்+ஆன்.

(குறிப்பு:—இதில் உண் என்பது பகுதியாம்.)

74. விகுதி என்பது யாது?

ஒரு சொல்லைப் பிரித்தால், ஈற்றில் நிற்கும் உறுப்பு விகுதியாம்.

(உ-ம்.) தின்றான்—தின்+ற்+ஆன்.

(குறிப்பு:—இதில் ஆன் என்பது விகுதியாம். முன் காட்டின உதாரணத்தின் ஈற்றில் உள்ள ஆன் என்பதும் விகுதியே.)

75. இடை நிலையாவது யாது?

ஒரு சொல்லைப் பிரித்தால், பகுதி விகுதிகளுக்கு இடையில் நிற்கும் முக்கிய உறுப்பு இடை நிலையாம்.

(உ-ம்.) செய்தான்—செய்+த்+ஆன்.

(குறிப்பு:—இதில் த் என்பது இடை நிலை. முன் காட்டிய உதாரணங்களின் இடையில் உள்ள ட், ற் என்பவைகளும் இடை நிலைகளே. பகுதி விகுதிகளுக்கு இடையில் இடை நிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் நான்குறுப்புகள் வருதல் உண்டு. அவற்றுள் இடை நிலை வினைச்சொல்லில் காலங் காட்டுவதால், முக்கிய உறுப்பு எனப்பட்டது.)

76. இறந்த காலத்தைக் காட்டும் இடை நிலைகள் எவை?

இறந்த காலத்தைக்காட்டும் இடை நிலைகள் த், ட், ற், இன் என்னும் இந்த நான்குமாம்.

(உ-ம்.) செய்தான்—செய்+த்+ஆன்.
கண்டான்—காண்+ட்+ஆன்.
தின்றான்—தின்+ற்+ஆன்.
தேடினான்—தேடு+இன்+ஆன்.

(குறிப்பு:—இவற்றுள் த், ட், ற், இன் என்பன இறந்த காலம் காட்டும் இடை நிலைகளாக வந்திருத்தல் காண்க.)

77. நிகழ் காலத்தைக் காட்டும் இடை நிலைகள் எவை?

கிறு, கின்று, ஆநின்று என்னும் இந்த மூன்றும் நிகழ் காலத்தைக் காட்டும் இடை நிலைகளாம்.

(உ-ம்.) உண்கிறான்—உண்+கிறு+ஆன்.
உண்கின்றான்—உண்+கின்று+ஆன்.
உண்ணாநின்றான்—உண்+ஆநின்று+ஆன்.

(குறிப்பு:—இவற்றுள் கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ் காலங் காட்டும் இடை நிலைகளாக வந்திருத்தல் காண்க.)

78. எதிர் காலத்தைக் காட்டும் இடை நிலைகள் எவை?

ப், வ் என்னும் இரண்டும் எதிர் காலத்தைக் காட்டும் இடை நிலைகளாம்.

(உ-ம்.) காண்பான்—காண்+ப்+ஆன்.
செய்வான்—செய்+வ்+ஆன்.

(குறிப்பு :—இவற்றில் ப், வ் என்பன எதிர் காலம் காட்டும் இடை நிலைகளாக வந்திருத்தல் காண்க.)

79. விகுதியால் காலத்தைக் காட்டும் வினைச் சொற்கள் எவை?

உம், ஈர், மின், க, அ, இ, ய், இன், ஆல், கால் முதலிய விகுதிகளைப் பெற்று வரும் வினைச் சொற்கள் விகுதியால் காலத்தைக் காட்டுவனவாம்.

(உ-ம்.) காணும், காணீர், காண்மின், காண்க, படிக்க, தேடி, போய், காணின், கண்டால், கண்டக்கால்.

80. பகுதி இரட்டித்து நின்று காலத்தைக் காட்டுவன யாவை?

கு, டு, று என்னும் இந்த மூன்றெழுத்துகளுள் ஒன்றை ஈற்றெழுத்தாகப் பெற்று, இரண்டு குற்றெழுத்துகளால் ஆகி வரும் வினைப் பகுதிகளுள் சில இரட்டித்து இறந்த காலத்தை மாத்திரம் காட்டும்.

(உ-ம்.) நகு + ஆன்—நக்கான்.
நடு + ஆன்—நட்டான்.
பெறு + ஆன்—பெற்றான்.

(குறிப்பு:—மேற் கூறியபடி வரும் வினைப் பகுதிகளில் சில இரட்டித்துக் காலங் காட்டா; இடை நிலை பெற்றே காலத்தைக் காட்டும். (உ-ம்.) கொடு + ஆன்—கொட்டான்

என வாராது; கொடுத்தான் [கொடு + த் + த் + ஆன்] எனவே வரும்.)

## பயிற்சி—12

1. பொருளின் தொழிலை எந்தச் சொல்லால் அறியலாம்?
2. ஒரு சொல்லைப் பிரித்தால், பகுதி எங்கே நிற்கும்? விகுதி எங்கே நிற்கும்? இடை நிலை எங்கே நிற்கும்?
3. உண்டான், செய்தான், உண்கிறான், செய்கின்றான், உண்பான், செய்வான் என்னும் சொற்களில் உள்ள இறந்த கால நிகழ் கால எதிர் கால இடை நிலைகளை வெவ்வேறாக எடுத்தெழுது.
4. உண்ணும், தோட்டான் என்னும் சொற்களில் காலங் காட்டுவன யாவை?

81. உடன்பாடாவது யாது?

உடன்பாடாவது தொழில் நடப்பதைக் காட்டுவது.

(உ-ம்.) (மரம்) அசைந்தது—இறந்த காலம்
,, அசைகின்றது—நிகழ் காலம்
,, அசையும்—எதிர் காலம்

82. எதிர்மறையாவது யாது?

எதிர்மறையாவது தொழில் நடவாமையைக் காட்டுவது.

(உ-ம்.) (மலை) அசையாது.

83. வினைச் சொல் எத்தனை வகையாம்?

முற்று வினை, எச்ச வினை என வினைச்சொல் இரண்டு வகையாம்.

84. முற்று வினையாது யாது?

முற்று வினையாவது பொருள் முடிந்து நிற்கும் வினையாம். இது வினை முற்று என்றும் கூறப்படும்.

(உ-ம்.) கண்டான், பார்த்தான்.

85. முற்று வினை எத்தனை வகையாம்?

முற்று வினை, 1. தன்மை வினை முற்று, 2. முன்னிலை வினை முற்று, 3. படர்க்கை வினை முற்று, 4. ஏவல் வினை முற்று, 5. வியங்கோள் வினை முற்று என ஐந்து வகையாம்.

86. தன்மை வினை முற்றாவது யாது?

தன்மை வினை முற்றாவது தன்மைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் முற்று வினையாம்.

87. அஃது எத்தனை வகைப்படும்?

அது தன்மை ஒருமை வினை முற்று, தன்மைப் பன்மை வினை முற்று என இரண்டுவகைப் படும்.

88. தன்மை ஒருமை வினை முற்று விகுதிகள் எவை?

என், அன் என்பன தன்மை ஒருமை வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடக்தேன், நடக்கின்றேன், நடப்பேன்,—என் } -உடன்
நடந்தனன், நடக்கின்றனன், நடப்பன்—அன் } பாடு
நடவேன் * * * என்-எதிர்மறை

89. தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகள் எவை?

ஓம், எம், அம் என்பன தம்மைப் பன்மை வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தோம், நடக்கிறோம், நடப்போம்—ஓம்
நடந்தேம், நடக்கின்றேம், நடப்பேம்—எம்
நடந்தனம், நடக்கின்றனம், நடப்பம்—அம்
} உடன்பாடு

நடவோம் .... .... ஓம்
நடவேம் .... .... எம்
} எதிர்மறை

90. முன்னிலை வினை முற்றாவது யாது ?

முன்னிலை வினை முற்றாவது முன்னிலைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினை முற்றாம்.

91. அஃது எத்தனை வகைப்படும் ?

அது முன்னிலை ஒருமை வினை முற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இரண்டு வகைப்படும்.

92. முன்னிலை ஒருமை வினை முற்றின் விகுதிகள் எவை?

ஆய், ஐ என்பன முன்னிலை ஒருமை வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தாய், நடக்கின்றாய், நடப்பாய்—(ஆய்)
நடந்தனை, நடக்கின்றனை, நடப்பை (ஐ)
} உடன்பாடு

நடவாய் .... ஆய்—எதிர்மறை

93. முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதி எது ?

ஈர் என்பது முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதியாம்.

(உ-ம்.) நடந்தீர், நடக்கின்றீர், நடப்பீர்—ஈர்—உடன்பாடு
நடவீர் .... .... —,,—எதிர்மறை

94. படர்க்கை வினை முற்றாவது யாது?

படர்க்கை வினை முற்றாவது, படர்க்கைக் கர்த்தாவின் தொழிலைத் தெரிவிக்கும் முற்று வினையாம்.

95. அஃது எத்தனை வகைப்படும்?

அஃது ஆண் பால் வினை முற்று, பெண் பால் வினை முற்று, பலர் பால் வினை முற்று, ஒன்றன்பால் வினை முற்று, பலவின்பால் வினைமுற்று என ஐந்து வகைப்படும்.

96. ஆண் பால் வினை முற்றின் விகுதிகள் எவை?

அன், ஆன் என்பன ஆண் பால் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தனன், நடக்கின்றனன், நடப்பன்-அன் } உடன்பாடு
நடந்தான், நடக்கின்றான், நடப்பான்-ஆன் }
நடவான் .... .... ....ஆன்—எதிர்மறை

97. பெண் பால் வினை முற்றின் விகுதிகள் எவை?

அள், ஆள் என்பன பெண் பால் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தனள், நடக்கின்றனள், நடப்பள்—அள் } -உடன்பாடு
நடந்தாள், நடக்கின்றாள், நடப்பாள்—ஆள் }
நடவாள் ... ... ... ஆள்-எதிர்மறை

98. பலர் பால் வினை முற்றின் விகுதிகள் எவை?

அர், ஆர் என்பன பலர் பால் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தனர், நடக்கின்றனர், நடப்பர்—அர் } உடன்
நடந்தார், நடக்கின்றார், நடப்பார்—ஆர் } பாடு
நடவார் ஆர்—எதிர்மறை

99. ஒன்றன் பால் வினை முற்றின் விகுதிகள் எவை ?

து, று என்பன ஒன்றன் பால் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தது, நடக்கின்றது—து } —உடன்பாடு
ஆயிற்று று }
நடவாது து—எதிர்மறை

(குறிப்பு:—ஒன்றன் பால் வினை முற்றில் எதிர் காலத்தில் பெரும்பாலும் உம் விகுதி வரும். று—விகுதி இறந்த காலத்தில் மாத்திரமே வரும்.)

100. பலவின் பால் வினை முற்று விகுதிகள் எவை ?

அ, ஆ என்பன பலவின்பால் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தன, நடக்கின்றன, நடப்ப—அ—உடன்பாடு
நடவா ஆ—எதிர்மறை

(குறிப்பு:—ஆ பலவின் பால் எதிர்மறை வினை முற்றிலேதான் வரும்; உடன் பாட்டில் வாராது.)

101. ஏவல் வினை முற்றாவது யாது ?

ஏவல் வினை முற்றாவது கட்டளைப்பொருளை உணர்த்தும் முற்று வினையாம். அஃது எதிர் காலத்தில் மாத்திரமே வரும்.

(குறிப்பு :—கட்டளைப் பொருளாவது, ஒருவரை நோக்கி, 'இது செய்,' என ஏவும் அர்த்தம்.)

102. ஏவல் வினை முற்று எத்தனை வகைப்படும் ?

**ஏவல் வினை முற்று, ஏவல் ஒருமை வினை முற்று, ஏவற்பன்மை வினை முற்று என இரண்டு வகைப்படும்.**

103. ஏவல் ஒருமை வினை முற்று விகுதிகள் எவை ?

**ஆய், இ, ஏல் என்பன ஏவல் ஒருமை வினை முற்று விகுதிகளாம்.**

(உ-ம்) நடவாய், செய்வாய்—ஆய் } உடன்பாடு
நடத்தி, செய்தி—இ }
நடவேல் ஏல்-எதிர்மறை

(குறிப்பு :—ஏல் விகுதி எதிர்மறையிலேதான் வரும்.)

104. ஏவல் வினை முற்று, விகுதி பெறுமலும் வருவது உண்டோ ?

**ஏவல் வினை முற்று, விகுதி பெறுமலும் வருவது உண்டு.**

(உ-ம்) நட, வா, படி, உண், தின், பார், செய்.

105. ஏவல் பன்மை வினை முற்று விகுதிகள் எவை ?

**மின், ஈர், உம் என்பன ஏவற்பன்மை வினை முற்று விகுதிகளாம்.**

(உ-ம்.) நடமின், செய்ம்மின்-மின்
நடவீர், படிப்பீர்—ஈர்
நடவும், செய்யும்—உம்
} -உடன்பாடு

நடவன்மின் மின்—எதிர்மறை

106. வியங்கோள் வினை முற்றாவது யாது?

வியங்கோள் வினை முற்றாவது வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் முதலிய பொருள்களை உணர்த்தி, இரு திணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் முற்று வினையாம்.

(உ-ம்.) வாழ்க—வாழ்த்தற்பொருள்
கெடுக—வைதற்பொருள்
அருளுக—வேண்டற்பொருள்
காண்க—விதித்தற்பொருள்

(குறிப்பு:—வைதல்-திட்டுதல், சபித்தல்.)

107. வியங்கோள் வினை முற்று விகுதிகள் எவை?

க, அ, இ என்பன வியங்கோள் வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்.) வாழ்க—க
வாழ—அ
வாழி—இ
} -உடன்பாடு

வாழற்க—க—எதிர்மறை

## பயிற்சி—13

1. பாடினேன், பாடினாய், பாடினான் என்னும் வினை முற்றுகளில் இது இது இன்ன இன்ன இடத்து வினை முற்றெனக் கூறு.
2. படித்தேன், படிக்கிறேன், படிப்பேன் என்னும் வினை முற்றுகளில் இது இது இன்ன இன்ன கால வினை முற்றென எழுது.
3. உண்பாய், செய்தி, காண்க, வாழி என்னும் வினை முற்றுகளில் உள்ள விகுதிகளைத் தனியாக எடுத்தெழுது.

108. எச்ச வினையாவது யாது ?

எச்ச வினையாவது திணை பால் இடங்களைக் காட்டாத விகுதியைப் பெற்றுப் பொருள் முடியாமல் நிற்கும் வினைச் சொல்லாம்.

109. அஃது எத்தனை வகைப்படும்?

அது பெயரெச்சம் வினையெச்சம் என இரு வகைப்படும்.

110. பெயரெச்சமாவது யாது ?

பெயரைக்கொண்டு முடியும் எச்ச வினை பெயர் எச்சமாம்.

111. பெயரெச்ச விகுதிகள் எவை ? அவற்றுள் எது எது எந்த எந்தப் பெயரெச்சத்தில் வரும்?

அ, உம் என்பன பெயரெச்ச விகுதிகளாம். இவற்றுள் அ என்னும் விகுதி இறந்த காலப்

பெயரெச்சத்திலும், நிகழ்காலப் பெயரெச்சத்திலும், எதிர்மறைப் பெயரெச்சத்திலும் வரும்; உம் என்னும் விகுதி எதிர்காலப் பெயரெச்சத்தில் வரும்.

(உ-ம்.) நடந்த, நடக்கின்ற—அ } உடன்பாடு
நடக்கும் உம் }
நடவாத அ-எதிர்மறை

(குறிப்பு:—அ என்னும் விகுதி இடை நிலை ஏற்றுக் காலத்தைக் காட்டும்; உம் என்னும் விகுதி தானே காலத்தைக் காட்டும்.)

112. வினை எச்சமாவது யாது?

வினை எச்சமாவது வினையைக் கொண்டு முடியும் எச்ச வினையாம்.

113. வினை எச்ச விகுதிகள் எவை?

உ, இ, ய், ஆ, இன், ஆல், கால், மல், மே, து என்னும் இப்பத்தும் வினை எச்ச விகுதிகளாம்.

114. இவற்றுள் இறந்த கால வினையெச்ச விகுதிகள் எவை?

உ, இ, ய் என்னும் மூன்றும் இறந்த கால வினை எச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்து,—செய்து—உ
ஓடி, தேடி—இ
போய், ஆய்—ய்

115. நிகழ் கால வினை எச்ச விகுதி எது?

அ என்பது நிகழ் கால வினை எச்ச விகுதியாம்.

(உ-ம்.) பொன்னன் வரக் கந்தன் போனான்.

116. எதிர் கால வினை எச்ச விகுதிகள் எவை?

இன், ஆல், கால் என்னும் மூன்றும் எதிர்கால வினை எச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) நடக்கின், செய்யின்—இன்
நடந்தால், செய்தால்—ஆல்
நடந்தக்கால், செய்தக்கால்—கால்

117. எதிர் மறை வினை எச்ச விகுதிகள் எவை?

மல், மே, து என்னும் மூன்றும் எதிர்மறை வினை எச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) நடவாமல், செய்யாமல்—மல்
நடவாமே, செய்யாமே—மே
நடவாது, செய்யாது—து

## பயிற்சி—14

1. வந்த மனிதன் நின்று பேசினான்—இதில் எது பெயரெச்சம்? எது வினை எச்சம்? காரணத்தோடு எழுது.
2. நடந்து, நடக்க என்பவற்றுள் இறந்த கால வினை எச்சம் எது?
3. இன், ஆல், மல், மே இவை எதை உணர்த்தும் வினை எச்ச விகுதிகள்? ஒவ்வொரு விகுதிக்கும் இரண்டிரண்டு உதாரணம் எழுது.

## iii. இடைச் சொல்

118. இடைச் சொற்களாவன எவை?

பெயர்ச்சொல் வினைச்சொற்களைப் போலத் தனித்து வழங்குதலின்றி, அவைகளைச் சார்ந்து வரும் சொற்கள் இடைச் சொற்களாம்.

119. அவை எவை?

அவை வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடை நிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டும், வினாவும், தத்தம் பொருளை உணர்த்துவனவும் ஆம்.

(குறிப்பு:—இவற்றுள் வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், சுட்டும், வினாவும் முன்னமே கூறப்பட்டன.)

120. சாரியைகளாவன எவை?

சாரியைகளாவன, பெயர்ச் சொல்லோடு வேற்றுமை உருபும், பகுதியோடு இடை நிலையும், இடை நிலையோடு விகுதியும் சேரும்போது அவற்றிற்கு இடையில் நிற்கும் அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நும், நம், ஏ, அ, உ, ஐ, கு, ன் முதலியனவாம்.

(உ-ம்.) சிலவற்றை—சில + அற்று + ஐ

இதில் சில என்னும் பெயர்ச் சொல்லோடு ஐ என்னும் வேற்றுமை உருபு சேருகையில் அவற்றிற்கு இடையில் நிற்பது அற்று என்னும் சாரியை இடைச் சொல்.

செய்குவான்—செய்+கு+வ்+ஆன்.

இதில் செய் என்னும் பகுதியோடு வ் என்னும் இடை நிலை சேரும் போது அவற்றிற்கு இடையில் நிற்பது கு என்னும் சாரியை இடைச் சொல்.

செய்தனன்—செய்+த்+அன்+அன்

இதில் செய் என்னும் பகுதியோடு அன் என்னும் விகுதி சேரும் போது அவற்றிற்கு இடையில் நிற்பது அன் என்னும் சாரியை இடைச் சொல்.

(குறிப்பு :—இப்படியே மற்றவைகளும் வரும். அன், ஆன் முதலியவை மேற் கூறியவற்றைச் சார்ந்து வருவதால், சாரியை எனப்பட்டன.)

121. உவமை உருபுகள் எவை ?

உவமை உருபுகளாவன, சொற்களில் ஒன்றோடு ஒன்றுக்குள்ள ஒப்புமையைக் காட்ட வரும் போல, ஒப்ப, நிகர, அன்ன முதலியனவாம்.

(உ-ம்.) குயில் போலப் பாடினாள்.

(குறிப்பு :—மற்றவைகளும் இப்படியே வரும்.)

122. தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்கள் எவை?

ஏ, ஓ, உம், மற்று, என, என்று முதலிய சொற்கள், தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்களாம்.

(உ-ம்.) இன்சொல்லே நல்லது.

இதில் ஏ என்னும் இடைச் சொல், தீச்-சொல்லினின்று இன்சொல்லைப் பிரித்துக் காட்டும் பிரிநிலைப் பொருளில் வந்தது.

இளமையிற் கல்லாமல் போனேனே !

இதில் ஏ என்னும் இடைச்சொல் இரக்கப் பொருளில் வந்தது.

மழை பெய்யுமோ, பொய்யாதோ !

இதில் ஓ என்னும் இடைச்சொல் சந்தே-கப் பொருளில் வந்தது.

பொன்னில் துருப் பிடிக்குமோ ?

இதில் ஓ என்னும் இடைச் சொல், துருப் பிடிக்காது என்னும் எதிர் மறைப் பொருளில் வந்தது.

(குறிப்பு:—இப்படியே மற்றவைகளும் பல பொருளில் வரும்.)

## பயிற்சி—15

1. இடைச் சொல்லாவன எவை?
2. தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்களுக்கு நான்கு உதாரணம் எழுது.
3. அவள் மயில் போல ஆடினள். ஆபரணம் மின்னை ஒப்பப் பிரகாசித்தது. அருச்சுனன் புலியை நிகரப் போர் செய்தான். பாலன்ன நிலவு-என்பவற்றிலுள்ள உவமை உருபுகளைக் குறிப்பிடு.

4. சாரியைகள் வரும்படி நான்கு சொற்கள் கூறு.
5. அவனும் நானும் போனோம், அவர்களில் ஒருவன் மற்று ஒருவனை வைதான்—இவற்றிலுள்ள இடைச் சொற்களைக் குறிப்பிடு.

## iv. உரிச் சொல்

123. உரிச் சொல் என்பது யாது?

உரிச் சொல் என்பது பெயர் வினைகளைப் போலத் தனித்து வழங்காமல், அவைகளை அடுத்து நின்று, அவற்றின் குணத்தை உணர்த்தும் உரிமை பூண்ட சொல்லாம்.

124. உரிச் சொல் எத்தனை வகைப்படும்?

ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவதும், ஒரு சொல் பல குணங்களை உணர்த்துவதும் என உரிச் சொல் இரண்டு வகைப்படும்.

(உ-ம்.) சால, நனி—இவை மிகுதி என்னும் ஒரு பொருளை உணர்த்தும் உரிச் சொற்கள்.

கடி-இது காப்பு, கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு முதலிய பல பொருள் உணர்த்தும் உரிச் சொல்.

### பயிற்சி—16

I. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள உரிச் சொற்களைக் குறிப்பிடு:

(அ) அவன் சாலப் பேசினான்.

(ஆ) இவள் நனி தின்றாள்.

(இ) சுந்தரன் நனி பேதை.

(ஈ) அவன் கடி மதிலுள் புகுந்தான்.

(உ) சீதை கடி மலர் கொய்தாள்.

(ஊ) இராமனுக்குக் கடி மணம் ஏற்படுத்தினர்.

(எ) அவன் கடி வாள் வீசினான்.

II. மேல்குறித்த வாக்கியங்களில் வந்துள்ள உரிச்சொற்களுக்குப் பொருள் எழுது.

## III. புணரியல்

125. புணர்ச்சியாவது யாது?

இரண்டு சொற்கள் சேரும் போது, நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சியாம்.

(குறிப்பு:—ஒன்று சேரும் இரண்டு சொற்களில் முதலில் நிற்பது நிலை மொழி என்றும், அதன் பின் வருவது வருமொழி என்றும் சொல்லப்படும்.)

126. புணர்ச்சி எத்தனை வகையாகும்?

புணர்ச்சி இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இரண்டு வகையாம்.

127. இயல்பு புணர்ச்சியாவது யாது?

இயல்பு புணர்ச்சியாவது, நிலை மொழியின் ஈறும் வருமொழியின் முதலும் விகாரம் இல்லாமல் சேருவதாம்.

28253

(உ-ம்.) மலை + பெரிது—மலை பெரிது.
நிலம்+வலிது—நிலம் வலிது.
நல்ல+பிள்ளை—நல்ல பிள்ளை.

128. விகாரப் புணர்ச்சியாவது யாது?

நிலை மொழியும் வருமொழியும் சேரும்போது, அவற்றிற்கு இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும்; நிலை மொழியின் ஈற்றெழுத்தாவது, வருமொழியின் முதலெழுத்தாவது, அவ்விரண்டெழுத்துகளுமாவது திரிதலும், கெடுதலும் அடைய, அவ்விரு மொழியும் புணர்வது விகாரப் புணர்ச்சியாம்.

(குறிப்பு:—எனவே, தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரம் மூன்று வகைப்படும் என்பது விளங்கும்.)

(உ-ம்.) மா+காய் மாங்காய் — ங் என்னும் எழுத்துத் தோன்றியது.
ஆல்+காய் — ஆலங்காய் — அம் என்னும் சாரியை தோன்றியது.
பொன்+குடம்—பொற்குடம்— ன் என்பது ற் ஆகத் திரிந்தது.
என்+தந்தை — என்றந்தை— த் என்பது ற் ஆகத் திரிந்தது.

TB PSG N4

எள் + நெய் — எண்ணெய் — ள்
என்பதும் ந் என்பதும் ண் ஆகத்
திரிந்தன.

மரம் + வேர் — மரவேர் — ம் என்பது கெட்டது.

## 1. உயிர் ஈற்றுப் புணர்ச்சி

(குறிப்பு:— உயிர் எழுத்தை ஈற்றிலுடைய மொழி வருமொழியோடு கூடுதல். நிலை மொழியின் ஈற்றில் உள்ள உயிர்மெய் எழுத்து உயிர் ஈறாகவே கொள்ளப்படும்.)

129. நிலை மொழியின் ஈற்றில் உயிர் எழுத்து நிற்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், எப்படிப் புணரும்?

உயிர் எழுத்துக்கு முன் உயிர் எழுத்து வந்தால், சில இடத்தில் (ய்) யகர மெய்யும், சில இடத்தில் (வ்) வகர மெய்யும் தோன்றும்.

130. யகர மெய் எங்குத் தோன்றும்?

இ, ஈ, ஐ என்னும் இம்மூன்று எழுத்துகளில் ஏதேனும் ஒன்று நிலை மொழியின் ஈற்றில் நிற்க, வரு மொழி முதலில் உயிரெழுத்து வந்தால், இடையில் யகரமெய் (ய்) தோன்றும்.

(உ-ம்.) மதி + அழகு — மதியழகு.
நீ + அறிவாய் — நீயறிவாய்.
பனை + ஓலை — பனையோலை.

131. வகர மெய் எங்குத் தோன்றும்?

நிலை மொழியின் ஈற்றில் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் இந்த ஆறு உயிரெழுத்துகளுள்

ஏதேனும் ஒன்று நிற்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், இடையில் வகர மெய் (வ்) தோன்றும்.

(உ-ம்.) பல+ஆடை—பலவாடை
நிலா+இருக்கின்றது- நிலாவிருக்கின்றது.
மடு+ஓரம்—மடுவோரம்
பூ+எடு—பூவெடு.
கோ+அழகு—கோவழகு
கௌ+அழகு—கௌவழகு

132. யகர மேய், வகர மேய் இரண்டும் எங்குத் தோன்றும்?

நிலை மொழியின் ஈற்றில் ஏ என்னும் உயிரெழுத்து நிற்க, வரு மொழி முதலில் உயிரெழுத்து வந்தால், இடையில் யகர மெய்யேனும், வகர மெய்யேனும் தோன்றும்.

(உ-ம்.) அவனே+அழகன்—அவனேயழகன்.
தே+ஆலயம்—தேவாலயம்

(குறிப்பு :—நிலை மொழியின் ஈற்றில் உள்ள ஏகாரம் இடைச் சொல்லானால், யகரமெய்யும், பெயர்ச் சொல்லானால், வகர மெய்யும் தோன்றுமென அறிக.)

133. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் முன்னும், எ என்னும் வினு எழுத்தின் முன்னும் உயிரேனும் யகர மெய்யேனும் வந்தால், எவ்வாறாகும்?

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் முன்னும், எ என்னும் வினா எழுத்தின் முன்னும் உயிரேனும் யகர மெய்யேனும் வந்தால், இடையில் வகர மெய் தோன்றும்.

(உ-ம்.) அ+அரசன்—அவ்வரசன்
இ+அரசன்—இவ்வரசன்
உ+அரசன்—உவ்வரசன்
எ+அரசன்—எவ்வரசன்?
} வருமொழி முதலில்உயிர் வந்தது.

அ+யானை—அவ்யானை
இ+யானை—இவ்யானை
உ+யானை—உவ்யானை
எ+யானை—எவ்யானை?
} வருமொழி முதலில் யகர மெய் வந்தது.

134. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் முன்னும் எ என்னும் வினா எழுத்தின் முன்னும் உயிரும் யகரமும் அல்லாத மற்ற மெய்யெழுத்து வந்தால் எவ்வாகுறும்?

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் முன்னும், எ என்னும் வினா எழுத்தின் முன்னும் உயிரும் யகரமும் அல்லாத மற்ற மெய்யெழுத்து வந்தால், வந்த மெய்யெழுத்தே மிகும்.

(உ-ம்.) அ+குதிரை—அக்குதிரை
இ+வழி—இவ்வழி
உ+மனிதன்—உம்மனிதன்
எ+ஙனம்—எங்ஙனம்?

## ii. மெய்யீற்றுப் புணர்ச்சி

135. மெய்யெழுத்தின் முன் உயிரெழுத்து வந்தால், எவ்வாறாகும்?

மெய்யெழுத்தின் முன் உயிரெழுத்து வந்தால், நின்ற மெய்யெழுத்துடன் வந்த உயிரெழுத்துக் கூடும்.

(உ-ம்.)

புகழ் + அடைந்தான் — புகழடைந்தான் (ழ் + அ—ழ)
வேல் + ஆயுதம் — வேலாயுதம் (ல் + ஆ—லா)
மான் + அழகு — மானழகு (ன் + அ—ன)

(குறிப்பு :—முன்னே மெய்யெழுத்து நிற்கப் பின்னே உயிரெழுத்து வந்தால், உயிர் எழுத்து மெய்யெழுத்தோடு கூடி, உயிர்மெய் எழுத்தாம். உயிர் முன்னே நிற்கப் பின்னே மெய் வந்தால், அவ்வுயிர் வந்த மெய்யோடு கூடாமல் அதைத் தொடர்ந்து நிற்கும். (உதாரணம் :) ஆ + ன் — ஆன், இ + ல் — இல், எ + ண் — எண்.)

136. தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மெய் எழுத்திற்கு முன் உயிர் எழுத்து வந்தால், எவ்வாறாகும்?

தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யெழுத்திற்கு முன் உயிரெழுத்து வந்தால்; அந்த மெய்யெழுத்து இரட்டும்.

(உ-ம்.) மெய்—உரைத்தான் (மெய் + ய் + உரைத்தான்) மெய்யுரைத்தான்.
நல் + அரசு—(நல் + ல் + அரசு) நல்லரசு.

பொன் + அணி—(பொன்+ன்+
அணி) பொன்னணி
கண் அழகு (கண்+ண் + அழகு)
கண்ணழகு

137. மகர மெய்யை ஈற்றிலுடைய மொழிகளுக்கு முன் க, ச, த என்னும் வல்லின மெய்கள் வந்தால், எவ்வாறு கூடும்?

மகர மெய்யை ஈற்றிலுடைய மொழிகளுக்கு முன் க, ச, த என்னும் வல்லின மெய்கள் வந்தால், அம்மகர மெய் ககரத்துக்கு முன் ஙகரமாகவும், சகரத்துக்கு முன் ஞகரமாகவும், தகரத்துக்கு முன் நகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மனம்+களித்தது—மனங்களித்தது.
குணம்+சிறந்தது—குணஞ்சிறந்தது.
பழம்+தந்தான்—பழந்தந்தான்.

## பயிற்சி—17

1. பின் வருஞ் சொற்களைச் சேர்த்தெழுது :—

மணி+அடித்தான், தீ+எரிகின்றது, மனை+எங்கே, பலா + இலை, மரு+ ஊர், பூ இதழ், தே+ஆரம், அவனே+அரசன்.

2. பின் வருவனவற்றைப் பிரித்தெழுது :—

அவ்வூர், இவ்யானை, எக்காலம், எந்நாள், மின்னொளி, கல்லெறிந்தான், பணந்தந்தான், இடஞ்சிறந்தது, பழங்கனிந்தது.

## IV. சொல் தொடர் இயல்

138. சொல் தொடராவது யாது?

சொல் தொடராவது, அர்த்த சம்பந்தத்தி-னால், சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்பதாகும்.

139. அஃது எத்தனை வகையாகும்?

அஃது எச்சச் சொல் தொடர் எனவும், முற்-றுச் சொல் தொடர் எனவும் இரண்டு வகை-யாகும்.

140. எச்சச் சொல் தொடராவது யாது?

பொருள் முடியாமல் நிற்கும் சொல் தொ-டர், எச்சச் சொல் தொடராம்.

(உ-ம்.) வந்த மனிதன்—
கண்ணனும் பலராமனும்—
பாடம் படித்து—
கருங்குதிரை—

141. முற்றுச் சொல் தொடராவது யாது?

பொருள் முடிந்து நிற்கும் சொல் தொடர், முற்றுச் சொல் தொடராம்.

(உ-ம்.) தசரதர் வந்தார்.
நான் பார்த்தேன்.
நீ படி.
இவன் கண்ணன்.
அவன் யார்?

(குறிப்பு :—முற்றுச் சொல் தொடர் வாக்கியம் என்றும் சொல்லப்படும்.)

142. வாக்கியத்தின் முக்கிய உறுப்புகள் எவை?

வாக்கியத்தின் முக்கிய உறுப்புகள் எழுவாய், பயனிலை என்பன.

143. எழுவாயாவது யாது?

வாக்கியம் தோன்றுதற்குரிய இடமாகிய சொல் எழுவாய் ஆகும்.

(குறிப்பு:—எழு - தோன்றும், வாய் - இடம். இடம் என்பது இங்கு இடமாகிய சொல்லை உணர்த்தியது).

144. பயனிலையாவது யாது?

பயனிலையாவது, சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வாக்கியமாவதற்குரிய பொருள் தன்னிடம் பொருந்தப்பெற்று நிற்கும் சொல்லாம்.

(குறிப்பு:—பயன் - பொருள், நிலை - நிற்கப்பெற்றது.)

145. அதனை விளக்கிக் கூறு.

'கம்பரும் அம்பிகாபதியும்' என்றாலும் 'கம்பரும் அம்பிகாபதியும் சோழன் சபைக்கு' என்றாலும், சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்கின்றன. ஆனால், அவற்றில் வாக்கியம் ஆவதற்குரிய பொருள் ஏற்பட இல்லை. 'கம்பரும் அம்பிகாபதியும் சென்றனர்,' அல்லது 'கம்பரும் அம்பிகாபதியும் சோழன் சபைக்குச் சென்றனர்,' என்-

ருல், அவை வாக்கியமாவதற்கு உரிய பொருள் அவற்றில் தோன்றுகிறது. அதற்குக் காரணம் அவை வாக்கியமாவதற்குரிய பொருள் அவற்றில் பொருந்தி இருத்தலே. இவற்றுள் எந்தச் சொல்லில் வாக்கியமாவதற்குரிய பொருள் பொருந்தி இருக்கிறதோ, அந்தச் சொல்லே பயனிலையாம். ஆகையால், மேலே கூறிய வாக்கியங்களில் உள்ள சென்றனர் என்னும் சொல்லே அவ்வாக்கியங்களில் பயனிலையாம்.

146. எழுவாய் என்ன சொல்லாய் இருக்கும்? பயனிலை என்ன சொல்லாய் இருக்கும்?

எழுவாய், எப்பொழுதும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்; பயனிலை, பெரும்பாலும் வினைச் சொல்லாகவும், சிறுபான்மை பெயர்ச் சொல்லாகவும், வினாவாகவும் இருக்கும்.

| | எழுவாய் | பயனிலை |
|---|---|---|
| (உ-ம்.) | கண்ணன் | வந்தான். |
| | இவன் | கண்ணன். |
| | இவள் | யார்? |

147. வாக்கியத்திற்கு எழுவாய் பயனிலைகளையன்றி வேறு உறுப்பும் உண்டோ?

வாக்கியத்திற்கு எழுவாய் பயனிலைகளையன்றிச் செயப்படு பொருள் என்னும் மற்றோர் உறுப்பும் உண்டு.

148. செயப்படு பொருளாவது யாது?

செயப்படு பொருளாவது, கருத்தாவின் தொழிலை ஏற்கும் பொருளாம்.

(உ-ம்.) தச்சன் கோவிலைக் கட்டினான்.

இதில் தச்சன் என்னும் கருத்தாவின் தொழிலாகிய கட்டுதலை ஏற்ற பொருள் கோவில் என்பது. ஆகையால், இவ்வாக்கியத்தில் கோவில் என்பது செயப்படு பொருளாம்.

(குறிப்பு :—செயப்படு பொருள் சில வாக்கியங்களில் வரும்; சில வாக்கியங்களில் வாராது.)

149. செயப்படு பொருள் எந்த வாக்கியத்தில் வரும்? எந்த வாக்கியத்தில் வாராது?

பயனிலை செயப்படு பொருள் குன்றா வினையாய் இருக்கும் வாக்கியத்தில் செயப்படு பொருள் வரும்; பயனிலை செயப்படு பொருள் குன்றிய வினையாய் இருக்கும் வாக்கியத்தில் செயப்படு பொருள் வாராது.

150. செயப்படு பொருள் குன்றிய வினையாவது யாது?

செயப்படு பொருள் குன்றிய வினையாவது, செயப்படு பொருள் இல்லாத வினைச் சொல்லாம்.

151. செயப்படு பொருள் குன்றா வினையாவது யாது?

செயப்படு பொருள் குன்றா வினையாவது, செயப்படு பொருள் உள்ள வினைச் சொல்லாம்.

152. ஒரு வினைச் சொல்லைச் செயப்படு பொருள் குன்றிய வினை என்றும், செயப்படுபொருள் குன்றா வினை என்றும் அறிவது எப்படி ?

ஒரு வினைச்சொல்லுக்கு முன் யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களில் ஒன்றை ஏற்றபடி வைத்துக் கேள்வி கேட்டால், விடைபெற முடியாதாயின், அதைச் செயப்படுபொருள் குன்றிய வினை என்றும், விடை பெற முடியுமாயின், அதைச் செயப்படு பொருள் குன்றா வினை என்றும் நாம் அறியலாம்.

(உ-ம்.) கண்ணன் வந்தான்.
கண்ணன் பார்த்தான்.

இவற்றில் வந்தான் என்னும் வினைச் சொல்லுக்குமுன், முன் கூறிய வினாச்சொற்களுள் எதனை வைத்துக் கேள்வி கேட்டாலும் விடை பெற முடியாது. ஆகையால், வந்தான் என்பது செயப்படு பொருள் குன்றிய வினையாம். பார்த்தான் என்னும் வினைச் சொல்லுக்கு முன், முன் கூறிய வினாச்சொற்களுள் எதை வைத்துக் கேள்வி கேட்டாலும் விடை பெறுதல் கூடும். ஆகையால், பார்த்தான் என்பது செயப்படு பொருள் குன்றா வினையாம்.

153. ஒரு வாக்கியத்தில் எழுவாயும், பயனிலையும் எவற்றில் ஒத்திருக்க வேண்டும் ?

ஒரு வாக்கியத்தில் எழுவாயும், பயனிலை-யும் திணை, பால், எண், இடம் இவற்றில் ஒத்து இருக்க வேண்டும்.

(உ-ம்.) யான் வந்தேன்—ஒருமை } தன்மை
யாம் வந்தோம்—பன்மை }

நீ வந்தாய் — ஒருமை } முன்னிலை
நீர் வந்தீர் — பன்மை }

அவன் வந்தான்—ஆண்பால் } படர்க்கை உயர்திணை
அவள் வந்தாள்—பெண்பால் }
அவர் வந்தார்—பலர் பால் }

அது வந்தது—ஒன்றன்பால் } படர்க்கை அஃறிணை
அவை வந்தன—பலவின்பால் }

154. ஒரு வாக்கியத்தில் எழுவாயை அறிவது எப்படி ?

ஒரு வாக்கியத்தில் பயனிலைக்கு முன் யார், எது, எவை என்னும் வினாச் சொற்களுள் ஏற்ற ஒன்றை வைத்து வினவினால், அதற்கு வரும் விடையே எழுவாய் என அறியலாம்.

(குறிப்பு:—தன்மை முன்னிலை வினைகள் பயனிலையானால், அவற்றைப் படர்க்கை ஒன்றன் பால் வினை போல வைத்து, யார் என்னும் வினாவை அமைத்து வினவ வேண்டும்.)

(உ-ம்.)

| வாக்கியம் | வினா | எழுவாய் | |
|---|---|---|---|
| அவன் வந்தான் | —யார் வந்தான் ? | —அவன் | படர்க்கை |
| அவள் வந்தாள் | —யார் வந்தாள் ? | —அவள் | |
| அவர் வந்தார் | —யார் வந்தார் ? | —அவர் | |
| அது வந்தது | —எது வந்தது ? | —அது | |
| அவை வந்தன | —எவை வந்தன ? | —அவை | |

| | | |
|---|---|---|
| நான் வந்தேன்—யார் வந்தது?—நான் | } | தன்மை |
| நாம் வந்தோம்—யார் வந்தது?—நாம் | | |
| நீ வந்தாய்—யார் வந்தது?—நீ | } | முன்னிலை |
| நீர் வந்தீர்—யார் வந்தது?—நீர் | | |

155. எழுவாய் பயனிலை செயப்படு பொருள்கள் அடை அடுத்து வருதலும் உண்டோ?

எழுவாய் பயனிலை செயப்படு பொருள்கள் அடை அடுத்து வருதலும் உண்டு.

(உ - ம்.) வெள்ளை மாடு வந்தது.
முயல் வேகமாய் ஓடும்.
அவன் நல்ல குதிரையை அடித்-தான்.

இவற்றில் வெள்ளை என்பது மாடு என்னும் எழுவாயையும், வேகமாய் என்பது ஓடும் என்னும் பயனிலையையும், நல்ல என்பது குதிரை என்னும் செயப்படு பொருளையும் அடுத்து வந்தன. ஆகவே, இங்கு வெள்ளை, வேகமாய், நல்ல என்னும் சொற்கள் அடை மொழிகளாம்.

## பயிற்சி—18

1. பின் வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் குறிப்பிடு :—

(அ) கிளி பேசியது.

(ஆ) நான் மணியை வாங்கினேன்.

(இ) நீ பாடத்தைப் படி.
(ஈ) அவன் ஒரு பசுவை வாங்கினான்.

2. பின் வரும் எழுவாய்களுக்கு ஏற்ற பயனிலையை அமைத்-
தெழுது :—

(அ) நீர்—
(ஆ) நாங்கள்—

3. பின் வரும் பயனிலைகளுக்கு ஏற்ற எழுவாயை அமைத்-
தெழுது :—

(அ)—குதிரை வாங்கினேன்.
(ஆ)—மரத்தில் ஏறினான்.
(இ)—மரத்தின்கீழ் இருந்தது.

4. அடியில்வரும் வாக்கியங்களில் ஏற்ற செயப்படு பொருளை
அமைத்தெழுது :—

(அ) கண்ணன்—மேய்த்தான்.
(ஆ) இராமன்—கொன்றான்.
(இ) பையன்—எடுத்தான்.

225